# புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

## மாத்தறை - நாவிமன சார்க் கலாசார மத்திய நிலைய கருத் திட்டத்தின் இடைக்கால மதிப்பீட்டு முன்மொழிவுகளுக்கான கோரிக்கை

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மாத்தறையில் அமைந்துள்ள நாவிமன சார்க் கலாசார மத்திய நிலைய கருத் திட்டத்தின் இடைக்கால மதிப்பீட்டினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த மதிப்பீட்டாளர்களிடமிருந்து முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க அழைக்கிறது.

**கருத் திட்டப் பின்னணி**

நாவிமன சார்க் கலாசார மத்திய நிலைய கருத் திட்டம் தெற்காசிய பிராந்தியத்தின் வளமான கலாசாரப் பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் மற்றும் கலாசார நடவடிக்கைகள் மூலம் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஜூன் 2025 வரையிலான காலப் பகுதியில் , மொத்த சிவில் நிர்மாணிப்புப் பணிகளில் சுமார் 65% நிறைவு பெற்றுள்ளது. எனினும், பல்வேறு நிர்வாக மற்றும் செயல்பாட்டு சவால்கள் காரணமாக கருத் திட்டம் தாமதங்களை எதிர்கொண்டுள்ளது.

**மதிப்பீட்டின் நோக்கம்**

இந்த இடைக்கால மதிப்பீட்டின் நோக்கங்கள்:

- இன்று வரை அடைந்த முன்னேற்றம் மற்றும் முடிவுகளை மதிப்பாய்வு செய்தல்,
- கற்றுக் கொண்ட பாடங்களை அடையாளம் காணுதல், மற்றும்
- கருத் திட்டத்தை தொடர்ந்து செயல்ப்படுத்துவதற்கும் மற்றும் வெற்றிகரமாக நிறைவேற்றத்திற்கான நடைமுறை பரிந்துரைகளை வழங்குதல்.

மதிப்பீடு பின்வரும் முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்தும்: **பொருத்தம், விளைவுத் திறன், செயல்த் திறன் மற்றும் நிலையான தன்மை.**

**மொத்த மதிப்பீட்டு காலம் (04) வாரங்கள் ஆகும்.**

**தேவையான தகுதிகள் மற்றும் அனுபவம்**

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்:

- அரசு அல்லது நன்கொடையாளர் நிதியுதவி அளித்த அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதில் நிரூபிக்கப்பட்ட அனுபவம்.

- தேசிய மதிப்பீட்டுக் கொள்கை அமுலாக்க கட்டமைப்பு பற்றிய அறிவு.
- சமூக - பொருளாதார ஆராய்ச்சி, அடிப்படை மற்றும் தாக்க ஆய்வுகள் மற்றும் கருத் திட்ட மதிப்பீடுகளில் மேற்கொண்ட அனுபவம்.
- MS Excel, SPSS, NVivo, அல்லது QDA Miner போன்ற கருவிகளைப் பயன்படுத்துவதில் திறமை மற்றும் வலுவான பகுப்பாய்வுத் திறன்கள்.

**தேர்வு அளவுகோல்கள்**

முன்மொழிவுகள் பின்வரும் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்:

1. **முன்மொழியப்பட்ட முறை**: முன்மொழியப்பட்ட கலப்பு - முறை அணுகுமுறையின் தெளிவு மற்றும் பொருத்தம் (ஆவண மதிப்பாய்வுகள், முக்கிய தகவல் அளிப்பவர் நேர்காணல்கள், கவனம் செலுத்தும் குழு விவாதங்கள் மற்றும் கள அவதானிப்புகள்).

2. **பணித் திட்டம்**: ஆறு வாரங்களுக்குள் மதிப்பீட்டை முடிப்பதற்கான ஒரு யதார்த்தமான மற்றும் நடைமுறைக்குச் சாத்தியமான பணித் திட்டம்.

3. **கடந்தகால அனுபவம்**: மதிப்பீட்டாளரின் நிரூபிக்கப்பட்ட அனுபவம் மற்றும் தகுதிகள், CV மற்றும் இதற்கு இணையான பணிகளின் சுருக்கம் என்பவற்றின் மூலம் ஆதரிக்கப்படுதல்.

4. **முன்மொழிவைச் சமர்ப்பித்தல்:** சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவின் முழுமை மற்றும் தரம், இதில் சுருக்கமான வழிமுறை, ஆரம்ப வேலைத் திட்டம், விலை முன்மொழிவு மற்றும் தொடர்புடைய மதிப்பீட்டு அனுபவத்தின் சுருக்கம் ஆகியவை அடங்கும்.

**தகவல் சமர்ப்பிப்பு**

ஆர்வமுள்ள மதிப்பீட்டாளர்கள் தங்கள் டெண்டர்களை 2025.11.28 ஆம் திகதி அன்று காலை 10.00 மணிக்குள் அல்லது அதற்கு முன் ”செயலாளர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, செத்சிரிபாய (முதல் கட்டம்), பத்தரமுல்லை” என்ற முகவரியில் அமைந்துள்ள கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் (கலாசார மேம்பாடு மற்றும் வெளியுறவு) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் ஒப்படைக்குமாறு அல்லது அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு முன்னர் அவை கிடைக்கப்பெறும் வகையில் பதிவு அஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**முன்மொழிவுகள் பின்வருவன விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும்**

- ஒரு சுருக்கமான முன்மொழிவு முறை
- ஒரு ஆரம்ப வேலைத் திட்டம்

- கடந்த கால பணிகள் உட்பட தொடர்புடைய மதிப்பீட்டு அனுபவத்தின் சுருக்கம் மற்றும்
- மொத்த தொழில்முறைக் கட்டணம் மற்றும் பிற தொடர்புடைய செலவுகளைக் குறிக்கும் விலை முன்மொழிவு.

முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்வது முடிவடைந்ததும் மேலதிக செயலாளர் (கலாசார மேம்பாடு மற்றும் வெளியுறவு) அலுவலகத்தில் இந்த முன்மொழிவுகள் திறக்கப்படும் என்பதுடன் இதற்காக நீங்கள் அல்லது உங்கள் பிரதிநிதி ஒருவருடன் கலந்து கொள்ள முடியும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும் என்பதுடன் தெரிவு செய்யப்படும் முன்மொழியப்பட்டவருக்கு இது தொடர்பாக மின்அஞ்சல் முகவரி மூலம் அறிவிக்கப்படும். இது தொடர்பாக உங்களுடைய விண்ணப்பப் படிவம், செயல்பாட்டில், சரியான மின் அஞ்சல் முகவரி கட்டாயமாக குறிப்பிடுதல் வேண்டும்.

முன்மொழிவு கடித உறையிக் மேல் மூலையில் “2025 மாதறை நாவிமன சார்க் கலாசார மத்திய நிலைய கருத் திட்டத்தின் இடைக்கால மதிப்பீட்டுக்கான விலை மதிப்பு” என கட்டாயமாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

மேலும் விரிவான தகவல்களுக்கும் முழுமையான குறிப்பு விதிமுறைகளுக்கும் (TOR), தயவு https://mbrc.gov.lk/ எனும் வலைத்தளத்தில் பார்வையிடவும்

செயலாளர்,
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,
8 ஆம் மாடி,
செத்சிரிபாய,
பத்தரமுல்லை.